# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 10 திங்கட்கிழமை 27.10.2025 கதிர் 352



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## கிளிநொச்சி ஜேர்மன் தொழிற்பயிற்சி மாணவர்கள் போராட்டம்




கிளிநொச்சி , ஒக் .27

கிளிநொச்சி ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் உப அதிபர் இடம்மாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய அதிபர் ஓய்வு வயதையும் தாண்டி கடமையாற்றுகின்ற நிலையில் துடிப்புடன் செயற்பட்ட எமது உப அதிபர் இடம்மாற்றம் செய்யப்பட்டமையானது மாணர்களின் நலன் பாதிக்கும் எனவும் இடம்மாற்றத்தை இரத்து செய்ய வலியுறுத்தி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

## அநுர அரசுக்கு எதிராக

# நவம்பர் 21 இல் நுகேகொடையில் பெரும் கூட்டம்




### – எதிர்க்கட்சிகள் தீர்மானம்

கொழும்பு, ஓக. 27

தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி பொதுக்கூட்டமொன்றை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நவம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நுகேகொடையில் இந்தக் கூட்டம் நடத்தப்படும் என்று கொழும்பில் இன்று நடந்த ஊடக சந்திப்பின்போது எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட ஏறாவூர் பெண் கைது



ஏறாவூர் , ஒக் .27

ஏறாவூர் பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு 7➤

## பெருமளவிலான கேரள கஞ்சாவுடன் முன்னாள் பைலட் சார்ஜெண்ட் கைது!

கொழும்பு, ஒக் .27

தொம்பே, நாகஹறதெனிய, பலுகம பகுதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொம்பே பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்

குறித்த கைது நடவடிக்கை 7➤



## வெல்லவாய பகுதியில் விபத்து– பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு!




கொழும்பு, ஒக் .27

வெல்லவாய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெல்லவாய பொலிஸ் பிரிவின் வெல்லவாய-தனமல்வில வீதியில் ஆதாவெலயாய பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. 7➤

## பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கை– அமைச்சர் ஆனந்த விஜேபால!

கொழும்பு, ஒக் .27

பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் மாலை பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவுடன் இணைந்து அமைச்சர் விஜேபால, இலங்கை ராமண்ண மஹா நிகாயவின் மகாநாயக்க தேரர் அதி வணக்கத்திற்குரிய மகுலேவே விமல தேரரை சந்தித்தனர். 7➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# சிறந்த தடகள வீரருக்கான விருதை வென்ற ருமேஷ்!

கொழும்பு, ஒக் .27

இந்தியாவின் ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய தடகள செம்பியன்ஷிப் போட்டியில், இலங்கையின் ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்கவுக்கு சிறந்த ஆண் தடகள வீரருக்கான விருது வழங்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் ருமேஷ் தரங்க தங்கப் பதக்கம் வென்றார்.

அவர் 84.29 மீட்டர் தூரம் எறிந்து இந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தார். (ஐ)

# தெற்காசிய தடகள செம்பியன்ஷிப் இலங்கைக்கு இரண்டாம் இடம்




கொழும்பு, ஒக் .27

இந்தியாவின் ராஞ்சியில் நேற்று முடிவடைந்த தெற்காசிய சிரேஸ்ட தடகள செம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

பல போட்டிகளில் இந்தியாவுடன் போட்டியிட்ட இலங்கை, பதக்கப் பட்டியலில் 4 தங்கப் பதக்கங்கள் வித்தியாசத்தில் முதலாம் இடத்தை இழந்தது.

இலங்கை 16 தங்கம், 14 வெள்ளி மற்றும் 10 வெண்கலத்துடன் 40 பதக்கங்களை வென்றது.

20 தங்கப் பதக்கங்களை வென்ற இந்தியா, பதக்கப் பட்டியலில் முன்னிலை பெற்றதுடன், 20 வெள்ளி மற்றும் 18 வெண்கலப் பதக்கங்களையும் வென்றது.

இருப்பினும், இலங்கை மற்றும் இந்தியாவைத் தவிர, வேறு எந்த நாடும் தங்கப் பதக்கத்தை வெல்லவில்லை.

குறிப்பாக, 02 வெள்ளிப் பதக்கங்களை வென்ற நேபாளத்தைத் தவிர, வேறு எந்த நாடும் வெள்ளிப் பதக்கத்தை ஏனும் வெல்லவில்லை

பங்களாதேஷ் 3 வெண்கலப் பதக்கங்களையும், மாலைத்தீவு 1 வெண்கலப் பதக்கத்தையும் வென்ற போதும், பூட்டான் ஒரு பதக்கத்தையும் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 60 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

போட்டியை நடத்திய இந்தியா மற்றும் இலங்கையைத் தவிர, பூட்டான், நேபாளம், மாலைத்தீவு மற்றும் பங்களாதேஷை பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு வீரர்களும் இதில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# இலங்கையில் நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரிப்பு



கொழும்பு, ஒக் .27

சீரற்ற காலநிலை காரணமாக, நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மழைநீர் நுளம்புகளின் இனப்பெருக்கம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதால்,

டெங்கு, லெப்டோஸ்பிரோசிஸ் **(leptospirosis)**, ஹெபடைடிஸ் ஏ **(hepatitis A)** டைபாய்டு **(typhoid)** மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் வேகமாகப் பரவக்கூடும் என மூத்த ஆலோசகர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம **(Dr. Ananda Wijewickrama)** தெரிவித்துள்ளார்.

வெள்ளம்சூழ்ந்த பகுதிகள் நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடங்களாக மாறும் எனவும் வெள்ள நீர் விலங்குகளின் சிறுநீருடன் கலந்து, லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது எலிக் காய்ச்சல் பரவ வழிவகுக்கும் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார். விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் வெள்ளம் அல்லது சேறு நிறைந்த பகுதிகளில் வேலை செய்பவர்கள் அல்லது நடந்து செல்பவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் எச்சரித்துள்ளார். அவர்கள் பாதணிகள் **(Boots)**, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளை அணிய வேண்டும் எனவும் காய்ச்சல், தலைவலி, சளி அல்லது தசை வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வெள்ளத்தின் போது மக்கள் பெரும்பாலும் கிணறுகள் அல்லது ஓடைகளிலிருந்து அசுத்தமான தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள், இது இந்த தொற்றுநோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது என மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

எனவே நுளம்பு உற்பத்தியைக் குறைக்க, குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தவும், சாப்பாட்டுக்கு முன் கைகளைக் கழுவுதல், கொதிக்க வைத்த தண்ணீரைக் குடித்தல், உணவை மூடி வைத்தல், சேற்று அல்லது தேங்கி நிற்கும் தண்ணீரைத் தவிர்ப்பது போன்ற எளிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறித்து கவனம்



கொழும்பு, ஒக் .27

எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு ஒரு முறையான திட்டத்தை வைத்திருக்க வேண்டும் என தேசிய நுகர்வோர் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசாங்க,ம் அரிசி, மரக்கறிகள், சீனி, பருப்பு, மற்றும் மா போன்ற அத்தியாவசியப் பொருட்களை அடையாளம் கண்டு, பண்டிகைக் காலம் முழுவதும் அவற்றின் விலைகள் நிலையாக இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே குறித்த பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. பண்டிகைக் காலத்திற்காக வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு எந்தத் திட்டத்தையும் வைத்திருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் உடனடியாக திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என தெரிவித்தார். (ஐ)

## மீன் பிடிக்கச் சென்றவர் ஏரியில் மூழ்கி உயிரிழப்பு



கொழும்பு, ஒக் .27

ரஸ்நாயக்கபுர பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட முடத்தவ ஏரியில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் குழாய் உதவியுடன் மீன்பிடிக்கும் மீனவர் என்றும் நீண்ட நேரம் ஆகியும் அவர் வீடு திரும்பாத காரணத்தால் அவரது குடும்பத்தினர் அவரைத் தேடியபோது, ஏரியின் நடுவில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் மொன்னேக்குளம பகுதியைச் சேர்ந்த 68 வயதானவர் என தெரியவந்துள்ளது.

சடலம் நிக்கவெரட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ரஸ்நாயக்கபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## 3,500 மெட்ரிக் டொன் பொன்னி சம்பா அரிசி நாட்டுக்கு

கொழும்பு, ஒக் .27

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா அரிசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, 3,500 மெட்ரிக் டொன் பொன்னி சம்பா அரிசி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அதன் முதல் தொகுதி கடந்த 23 ஆம் திகதி நாட்டிற்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா அரிசியின் மற்றுமொரு தொகுதி கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா அரிசி பற்றாக்குறைக்கு தீர்வாக, புசு 11 பொன்னி சம்பா அரிசியை கடந்த 15 ஆம் திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு இறக்குமதியாளருக்கு அதிகபட்சமாக 520 மெட்ரிக் டொன் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

நாட்டில் மதிப்பிடப்பட்ட ஆண்டு அரிசி நுகர்வு சுமார் 2.4 மில்லியன் மெட்ரிக் டொன் என்பதுடன், இதில் கீரி சம்பாவின் ஆண்டு நுகர்வு 10 சதவீதம், அதாவது சுமார் 200,000 மெட்ரிக் டொன் ஆகும்.(ஐ)

## ஜகத் வித்தான மீதான உயிர் அச்சுறுத்தல்: திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோருடனான தொடர்பே காரணம்!



*கொழும்பு, ஒக் .27*

*ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசியல் காரணங்களால் அல்ல என பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.*

*ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களுடனான அவரது தொடர்புகளே இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*ஆரம்ப விசாரணையில் இந்த அச்சுறுத்தல்கள் அத்தகைய தொடர்புகளுடன் தொடர்புடையவை என்பது தெரியவந்துள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தற்காலிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.*

*பாதாள உலகம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களுடனான அவரது கடந்தகால கொடுக்கல் வாங்கல்களே என புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுவதாக பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*மேலும், ஜகத் விதானவின் கோரிக்கையைத் தொடர்ந்து, அவரது பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.*

*இதன்படி, அச்சுறுத்தலின் மூலத்தை உறுதிப்படுத்தவும், இதில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காணவும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.(ஐ)*

# நடித்தால் நாட்டை ஆளலாம் என்ற போக்கு கொடுமையானது: சீமான்



நடித்தால் நாட்டை ஆளலாம் என்ற போக்கு கொடுமையானது என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நிருபர்களிடம் சீமான் கூறியதாவது: தமிழ் சமூகம் எதை நோக்கி செல்கிறது என தெரியவில்லை. கல்வி வியாபாரமாக மாறியதால் கல்வியில் அரசியல் கற்பிக்கப்படவில்லை. கலையை போற்றலாம், கலைஞர்களை கொண்டாடலாம். நடித்தாலே போதும் நாட்டை ஆளக் கூடிய அனைத்து திறமையும் வந்து விடுகிறது, தகுதி வந்துவிடுகிறது என்று நாட்டு மக்கள் கருதுவார்களானால், அது ரொம்ப கொடுமையான போக்காக மாறிவிடும்.

நீங்கள் நடிக்கும் போது நோட்டை கொடுப்போம் வாழ்வதற்கு? நடிப்பதை நிறுத்திவிட்டால் நாட்டை கொடுப்போம் ஆள்வதற்கு, என்கிற கோட்பாடு, நிலைப்பாடு உலகத்திற்கே அறிவை கடன் கொடுத்த தமிழ் சமூகம் இச்செயல்களை ஏற்கிறதா? இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் சினிமா உள்ளது.

ஆனால் எந்த ஒரு மாநிலத்தில் நிகழாத விபத்து தமிழகத்தில் நடக்கிறது ஏன்?. திரை கவர்ச்சிகளில் மூழ்கி கிடக்கும் தமிழ் இனம் விழிப்புற்று ஏழ வேண்டும். அரசியல் என்பது வாழ்வியல், முன்னோர் எப்படி வாழ்ந்தார்கள் என்பது பற்றி படித்து தெரிந்து கொள்ளாவிட்டால் பெரும் சிக்கல் ஆகிவிடும். பாதிக்கப்பட்ட மக்களை நேரில் அழைத்து ஆறுதல் கூறுவது விஜயின் விருப்பம். அதில் நாம் கருத்து சொல்ல முடியாது. (ஐ)

## ராகுலுக்கு என் மீது தனிப்பட்ட அன்பு: வார்த்தையால் சொல்ல முடியாது என்கிறார் முதல்வர் ஸ்டாலின்



ராகுல் என் மீது தனிப்பட்ட முறையில் அன்பை காட்டுவார். அதனை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கருணாநிதி அரங்கில், விருதுநகர் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கரின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்று, முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: சுயமரியாதை திருமணத்துக்கு திமுக ஆட்சியில் சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டது. திமுகவும், காங்கிரசும் ஒரு காலத்தில் வெவ்வேறு பாதைகளில் பயணித்தன.

நாட்டு நலன் கருதி, தமிழகத்தின் வளர்ச்சிக்காக, அதையும் தாண்டி இந்திய நாட்டின் ஒற்றுமைக்காக ஒரே அணியில் அதே சிந்தனையுடன் தற்போது ஒரே அணியில் பயணித்து கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவராக விளங்கி கொண்டிருக்கும் ராகுல், என் மீது தனிப்பட்ட முறையில் அன்பை காட்டுவார். அதனை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது.

என்னை எப்போது நேரில் பார்த்தாலும் மை டியர் பிரதர் என அழைப்பவர் ராகுல். நான் அவரை சகோதரர் என்பேன். என்னை தனது மூத்த அண்ணனாக ஏற்றுக்கொண்ட ராகுல் இந்திய மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறார். திமுக, காங்கிரஸ் உறவு நிச்சயம் நாட்டின் எதிர்காலத்தை காப்பாற்றும். மணமக்கள் தங்களுக்கு பிறக்க போகும் குழந்தைகளுக்கு அழகான தமிழ் பெயர் வையுங்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)







## கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு விஜய் ஆறுதல்

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, அக்கட்சித் தலைவர் விஜய், மாமல்லபுரத்தில் இன்று (அக் 27) ஆறுதல் தெரிவித்தார். அவர்களிடம் மருத்துவ செலவு,கல்வி செலவு உள்ளிட்டவற்றை ஏற்றுக்கொள்வதாக விஜய் உறுதி அளித்து இருக்கிறார்.

த.வெ.க., கட்சித் தலைவர் விஜய், 2026 சட்டசபை தேர்தலை முன்னிட்டு, முக்கிய நகரங்களில் பிரசாரம் செய்தார். கடந்த செப்., 27ம் தேதி, நாமக்கல், கரூர் ஆகிய பகுதிகளில் பிரசாரம் செய்தார். கரூரில் நடந்த பிரசாரத்தின்போது ஏற்பட்ட நெரிசலில், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 41 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களின் குடும்பத்தினரை, விஜய் நேரடியாக சந்தித்து ஆறுதல் கூறாதது குறித்து கடும் விமர்சனம் எழுந்தது.

அதற்காக அவர் முயன்றதாகவும், பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களால் தவிர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. இச்சூழலில், இறந்த வர்களின் குடும்பத்தினரை, மாமல்லபுரம் பூஞ்சேரி பகுதியில் உள்ள தனியார் ஹோட்டலுக்கு வரவழைத்து, அவர்களை விஜய் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க முடிவெடுத்து, அக்கட்சியினர் ஏற்பாடு செய்தனர்.

இந்நிலையில் இன்று (அக் 27) கரூர் நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை மாமல்லபுரம் ஹோட்டலில் சந்தித்து விஜய் ஆறுதல் கூறினார்.

அப்போது உயிர் இழந்தோர்களின் குடும்பத்தினரிடம் மருத்துவ செலவு, கல்வி செலவு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக விஜய் உறுதி அளித்தார். (ஐ)

# மலேசியாவில் ஜெய்சங்கர், ரூபியோ சந்திப்பு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த ஆலோசனை

கோலாலம்பூரில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோவும் சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ‘ஆசியான்’ அமைப்பில், இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் உட்பட, 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த ஆண்டு ஆசியான் கூட்டமைப்பின் தலைமை பொறுப்பு மலேஷியா வசம் உள்ளது. நாம் இந்த அமைப்பின் முக்கிய நட்பு நாடாக உள்ளோம். மலேஷிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று துவங்கிய இந்த அமைப்பின் உச்சி மாநாடு நாளையுடன் நிறைவு பெறுகிறது. இந்த மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு பதிலாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மலேஷியா சென்று இருக்கிறார். ஆசியான் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்தார். இந்தியா- அமெரிக்கா இடையே நடந்து வரும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர். இது தொடர்பாக சமூக வலைதளத்தில் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இன்று காலை கோலாலம்பூரில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோவை சந்தித்ததில் மகிழ்ச்சி.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் உலகளாவிய பிரச்னைகள் குறித்து விவாதித்தோம். இவ்வாறு ஜெய்சங்கர் கூறியுள்ளார். அமெரிக்கா- இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே நடந்து வரும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் இந்த சந்திப்பு நடந்துள்ளதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. (ஐ)



# சுதந்திரம் என்பது...

அர்ச்சனா சேகர்




சமீபத்தில் வலைத்தளத்தில் வெளிவந்த ஒரு படம் என்னைப் பல கோணங்களில் யோசிக்க வைத்தது. ஒரு மேல் ஓடு முழுவதும் அகற்றப்பட்ட ஆமையின் படம். அதன் கீழ் எழுதபட்ட வாசகம், ‘இன்றைய கால பெண்கள் இதைத்தான் சுதந்திரம் என எண்ணுகின்றனர்.’

சமூகம் பெண்ணின் மீது திணித்துள்ள கட்டுப்பாடுகள் ஆமையின் ஓடாகவும், அந்த ஓட்டைக் கலைந்தால் அது ஆபத்தாகவும், அதைத்தான் சுதந்திரமாகப் பெண்கள் நினைப்பதாகவும் வரையப்பட்ட ஒரு தகவல் படம்.



சுதந்திரம் என்றால் என்ன? பறவையைப் போல எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாத, நாளைய தினத்தைக் குறித்த எந்தப் பிரக்ஞையுமின்றி தன் நிகழ்காலத்தின் சந்தோஷங்களை அனுபவித்துப் பறந்து செல்வதுதானே!

சமூகம் கருதுவது போல இங்கு நடைமுறையில் பெண்கள் இருக்கின்றனரா? நவீன யுகத்தில் எங்கோ ஒரு சில பெண்ணின் வாழ்வியல் முறைகளை வைத்துக் கொண்டு பெண் இனமே இப்படித்தான் இருக்கிறது என்று கூற முடியுமா?

பேருந்துப் பயணத்தில்கூடத் தன்வீட்டின்நினைவுகளைத்தான் பெண்கள்சுமந்தபடிசெல்கின்றனர். ஒரு மழைத்துளி நிலத்தில் விழுவதற்கு முன்பே அவள் தன் குழந்தைகளை மனதில் ஏந்திக்கொள்கிறாள். என் குழந்தைகள் மழையில் என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்றே கலக்கம் கொள்கிறாள்.

தன்னைப் பற்றிய ஒரு துளிச் சிந்தனையும் இல்லாமல், தன்னைச் சுற்றி நடக்கிற நிகழ்வுகளை அசை போட்டபடி தன் குடும்பத்தின் நலனையும் எதிர்காலத் தேவையையும் சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் பெண்களுக்கு நீங்கள் கொடுத்து இருப்பது சுதந்திரம்தானா?

பொருளாதார தேவைக்காகத் தற்போது பெண்கள் வேலைக்குச் செல்வது ஒன்றுதான் சுதந்திரம். அதுவும் சொல்லப் போனால் சில இல்லங்களில் அவளின் ஊதியத்தையும் சேர்த்து சுரண்டுவதற்குத் திட்டம் போடப்படுகிறது.

பல இல்லங்களில் பணிக்குச் செல்வதும், வீட்டு வேலைகளைச் செய்வது மட்டுமே பெண்ணின் வேலை. அவளின் வங்கிக் கணக்கிலிருந்து அத்தனை நிர்வாகமும் அந்த வீட்டுத் தலைவனிடம்தான். அவளை மேற்பார்வையிடும் அதிகாரியாக இருப்பது அவனது பணியாக இருக்கிறது

இன்னும் சில வீடுகளில் நிர்வாகத்தைப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு, அவளைக் கேள்வி மேல் கேள்வி மட்டும் கேட்டு உயிரை வாங்கிக் கொண்டிருப்பது, இன்னொரு வகை மனோபாவம் கொண்ட ஆண்கள்.

என் தலைமுறையின் நிஜம் இதுதானே? நாங்கள் பெண்ணுக்குச் சுதந்திரம் கொடுக்கிறோம் என்று பிதற்றிக் கொண்டிருக்கலாம். தாங்கள் அடிமையாக இருப்பதையே பெண்கள் உணராமல், உணர விடாமல் இந்தச் சமூகம் வைத்து இருக்கிறது. நீங்கள் சுதந்திரம் கொடுத்து இருப்பதே, எங்களை அடிமைத்தனத்தில் இருந்து தப்பாவிடாமல் இருக்க செய்யும் சூட்சுமம்தானே!

சில நாட்களுக்கு முன் என் தோழிக்குத் திருமணம். நானும் மற்றொரு தோழியுமாக அங்கு செல்லத் தீர்மானித்திருந்தோம். அவளை அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது, ‘சரி வருகிறேன்’ என்றாள். நானும் ஆயத்தமாகிவிட்டு மறுபடி அவளைத் தொடர்புகொண்ட போது ‘வரவில்லை’ என்று கூறிவிட்டாள்.

என்னவென்று கேட்ட போது, அவள் கணவன் செல்லக் கூடாது என்று மறுத்துவிட்டதாகச் சொன்னாள். என் தோழி பணிக்குச் சென்று நல்ல சம்பாத்தியத்தில் இருக்கும் பெண். அவளும், என் வாழ்க்கையே இப்படித்தான் என்று புலம்பத் தொடங்கிவிட்டாள்.

அவள் அலைபேசியைத் துண்டித்ததும், அவளின்நிலைமையும், நான் பார்த்த ஆமையின் புகைப்படமும் என்னை மாற்றி மாற்றி வதைத்தன. எங்கோ ஒரு மூலையில் நடக்கும் ஒரு பெண்ணின் நிகழ்வு வைத்து எல்லாப் பெண்களையும் பொத்தாம் பொதுவாக அடிமைப்படுத்துவது முறைதானா? பணிக்குச் செல்லும் பெண்ணின் நிலைமை இன்னும் பரிதாபம். வீட்டையும் சமாளிக்க வேண்டும், பணியிடங்களில்நடக்கும் அரசியலையும் பஞ்சாயத்தையும் சமாளிக்க வேண்டும். வாங்குகிற ஊதியத்தைக்கூடத் தனக்கென்று ஒரு பொருள் வாங்க முடியாது போனால், பெண்கள் வாழ்கிற வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன?

பெண்ணுக்கு என்று தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் இருக்கவே கூடாதா? அவளுக்கென்று நட்பு வட்டம் இருக்கக் கூடாதா? அவளின் அலைபேசியைக்கூட ஆராய்ச்சி செய்யும் ஆண்கள் இருக்கத்தானே செய்கின்றனர். “ஏன், மனைவியின் மொபைலை கணவன் பார்க்கக் கூடாதா?” என்று ஆதங்கம் வேறு வந்து தொற்றிக் கொள்கிறது ஆண்களுக்கு. மனைவியின் அலைபேசியில் அவளைச் சார்ந்த விஷயம் மட்டும் அல்ல, அவள் தோழியரின் அல்லது பணியிடத்தின் ரகசியங்களும் ஒளிந்திருக்கும் என்று உணர்ந்துகொள்வதில்லை.



கணவன், மனைவி உறவில் கட்டுப்படுகள் தேவையா? காதல் என்ற ஒற்றை உணர்வு தவிர இருவருக்கும் வேறு என்ன விதமான பரஸ்பரத்தைப் பகிர்ந்து கொடுக்க முடியும்? கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டும்தானா?

எங்கேயாவது ஒருசில பெண்கள் இந்தக் கட்டுப்பாட்டை மீறும்போது அவர்களை இந்தச் சமுதாயம் வாழ விடுகிறதா? இத்தனை கட்டுப்பாட்டையும் பெண்கள் மீது திணித்து சுதந்திரம் என்கிற மேல் போர்வையை மட்டும் போர்த்தி நீங்கள் அழகு பார்ப்பது முறையா? இது சுதந்திரம் ஆகுமா?

எங்களையும் சக மனித இனமாக மதியுங்களேன் என்பதுதான் பெண்களின் விருப்பம். கட்டுப்பாடில்லாத காதல்தான் செய்வோமே!







# தென் சீனக்கடலில் விழுந்து நொறுங்கிய அமெரிக்க விமானம், ஹெலிகாப்டர்!



தென் சீனக்கடல் பகுதியில் அமெரிக்காவின் போர் விமானமும், கடற்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டரும் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகின. தெற்கு சீனக் கடல் பகுதி மிகவும் சர்ச்சை மிகுந்த பகுதியாகும். இந்தக் கடல் பகுதியை சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே மற்றும் தைவான் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன. இந்த நிலையில், தெற்கு சீனக்கடலில் அமெரிக்காவின் போர் விமானமும், கடற்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டரும் அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகின. நேற்று உள்ளூர் நேரப்படி மதியம் 2.45 மணியளவில் அமெரிக்க ஏவுகணை விமானம் தாங்கிக் கப்பல் யுஎஸ்எஸ் நிமிட்ஸ‌ில் இருந்த எம்எச் 60ஆர் சீ ஹாக் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது. அதில், இருந்த 3 விமானிகள் பத்திரமாக வெளியேறினர்.

இதைத் தொடர்ந்து, பிற்பகல் 3:15 மணியளவில், எப்ஏ-18 எப் சூப்பர் ஹார்னெட் போர் விமானமும் விபத்துக்குள்ளானது. இதில், இந்த 2 விமானிகளும் பத்திரமாக வெளியேறி உயிர்பிழைத்தனர். இந்த அடுத்தடுத்த விபத்து சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப் விரைவில் சீன அதிபரை சந்திக்க உள்ள நிலையில், அமெரிக்காவின் ஹெலிகாப்டரும், விமானமும் அடுத்தடுத்து தெற்கு சீனப்பகுதியில் விபத்துக்குள்ளாகியிருப்பது பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.(ஐ)

## 83 குழந்தைகளுக்கு தாயாகும் செயற்கை நுண்ணறிவு அமைச்சர்



அல்பேனியாவில் உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு அமைச்சரான டயல்லா, 83, குழந்தைகளுக்கு தாயாக போவதாக பிரதமர் எடி ராமா தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியா கடந்த செப்டம்பரில், உலகிலேயே முதல் முறையாக ஏ.ஐ., எனப்படும் செயற்கை நுண்ணறிவு அமைச்சரை நியமித்தது.

இது உலகில் மனிதர் அல்லாத செயற்கை அமைச்சர் என்ற பெயரை பெற்றது. டயல்லா என்று பெயரிடப்பட்ட இந்த அமைச்சர் பொது கொள்முதல் துறைக்கு நியமிக்கப்பட்டார். வெளிப்படைத்தன்மையுடன், முறைகேடு எதுவும் இல்லாமல் இந்த துறை செயல்படும் விதமாக டயல்லா இந்த துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், அல்பேனிய பிரதமர் எடி ராமா செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட அமைச்சர் டயல்லா, கர்ப்பமாக இருப்பதாகவும் 83 குழந்தைகள் பிறக்கும் எனவும் அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

ஒவ்வொரு சோசலிஸ்ட் கட்சி எம்.பி.,க்களுக்கு உதவும் வகையில் 83 உதவியாளர்கள் அல்லது குழந்தைகள் நியமிக்கப்பட உள்ளனர். இதற்காக செயற்கையாக உருவாக்கப்படும் 83 உதவியாளர்கள் பார்லிமென்ட் நிகழ்வுகள் அனைத்தையும் பதிவு செய்வர்.

மேலும் எம்.பி.,க்கள் அவையில் இல்லாத போது அவர்கள் தவறவிட்ட விவாதங்கள் குறித்தும் அவர்கள் வந்ததும் தெரிவிப்பர். தேவைப்பட்டால் எதிர்க்கட்சியினருக்கு அவையில் பதிலும் அளிப்பர். இந்த புதிய முறை அடுத்த ஆண்டு இறுதியில் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும். அடுத்த முறை நீங்கள் என்னை பார்லிமென்ட்டுக்கு பேச அழைத்தால் அப்போது டயல்லாவிடம் புதிதாக 83 குழந்தைகள் எனப்படும் உதவியாளர்கள் இருப்பார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.(ஐ)

## அமெரிக்காவின் 'ஆச்சி' 100 வயதில் மரணம்



அமெரிக்க தொலைக்காட்சி தொடர்களில், தாய் கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்த ஜூன் லாக்ஹார்ட், தன் 100வது வயதில் காலமானார்.

நம் தமிழ் சினிமாவில் தாய் கதாபாத்திரத்தில் நடித்து மக்கள் மனதை கொள்ளை கொண்டவர், ஆச்சி என அன்போடு அழைக்கப்பட்டவர் நடிகை மனோரமா.

இவரைப் போன்று, அமெரிக்காவின் தொலைக்காட்சி தொடர்களில் பாசமிகு தாயாக நடித்து பலராலும் அறியப்பட்ட ஜூன் லாக்ஹார்ட், 100, வயது மூப்பின் காரணமாக கலிபோர்னியாவில் உள்ள தன் இல்லத்தில் காலமானார்.

ஜூன் லாக்ஹார்ட்டின் தாய், தந்தை இருவரும் பிரபலமான நடிகர்கள். கடந்த 1938ம் ஆண்டு வெளியான 'எ கிறிஸ்மஸ் கரோல்' என்ற திரைப்படத்தில் தன் பெற்றோருடன் இணைந்து நடித்தார். இதனைத் தொடர்ந்து சில படங்களில் நடித்த அவர், டிவி தொடர்களில் நீண்ட காலம் தாய் கதாபாத்திரத்தில் நடித்தார்.(ஐ)

## சீனாவில் ரவீந்திரநாத் தாகூரின் சிலை திறப்பு



*சீனத்தலைநகர் பீஜிங்கில் இந்திய தூதரகம் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏற்பாடு செய்திருந்த, இந்திய தத்துவ மரபுகளின் சங்கமம் என்ற கருத்தரங்கின் ஒரு பகுதியாக நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரின் மார்பளவு சிலை நேற்று திறக்கப்பட்டது. இந்த சிலையை பிரபல சீன சிற்பி யுவான் சிகுன் செதுக்கியிருந்தார்.*

*சீனாவிற்கான இந்திய தூதர் பிரதீப் ராவத், தாகூரின் மார்பளவு சிலையை திறந்து வைத்து கூறியதாவது: ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தாகூரின் சீனா பயணம் நமது நாகரிக உரையாடலில் ஒரு மைல்கல். உலகளாவிய மனிதநேயம் பற்றிய தாகூரின் செய்தியும், சூ ஜிமோ மற்றும் லியாங் கிச்சாவோ போன்ற சீன அறிஞர்களுடனான அவரது நட்பும் இரு நாடுகளுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கிறது. இவ்வாறு பிரதீப் ராவத் கூறினார். (ஐ)*

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள கலைமகள் பாடசாலை வீதிக்கு அருகில் இருந்த இந்த வீட்டை முற்றுகையிட்டிருந்தனர்.

இதன்போது நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 56 வயதுடைய பெண்ணும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 5350 அப ஜஸ் போதைப்பொருளும், போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டியதாக சந்தேகிக்கப்படும் 3,61000 ரூபாய் பணத்தையும் மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

கைதான பெண்ணை இன்றைய தினம்(27) நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெருமளவிலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து 196 கிலோ 218 கிராம் கேரள கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதானவர் இரத்மலானையில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தில் பைலட் சார்ஜெண்டாக பணியாற்றி 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஓய்வு பெற்றவர் என்பது தெரியவந்துள்ளது.

கைதான சந்தேகநபர், நீதிமன்றங்களில் இருந்து தலைமறைவாகி, பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரான செம்புக்குட்டி ஆராச்சிகே டிலான் தனுஷ்க லக்மாலின் மைத்துனர் என்பதும் தெரியவந்துள்ளது.

## வெல்லவாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனமல்வில திசையிலிருந்து வெல்லவாய திசை நோக்கிச் சென்ற இராணுவப் பேருந்தும் எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் செலுத்துனர் படுகாயமடைந்திருந்த நிலையில், வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வெல்லவாய, ராஜமாவத்தையைச் சேர்ந்த 36 வயதான பொலிஸ் சார்ஜென்ட் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் வெல்லவாய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த சந்திப்பின் போது, ஒக்டோபர் 30ஆம் திகதி முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள போதைப்பொருள் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் குறித்து தேரருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது அமைச்சர் விஜேபால, பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டிலிருந்து போதைப்பொருட்களை முற்றிலுமாக ஒழிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான இந்திய பிரஜை!

ஹெரோயின் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய இந்தியப் பிரஜை என தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

குறித்த நபர் நேற்று (26) மாலை 04.15 மணிளவில் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான ரூடு-315 ரக விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அவரை சோதனையிட்ட வேளையில், குறித்த சந்தேகநபரிடம் இருந்து 02 கிலோ 832 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகை கொழும்பின் பம்பலப்பிட்டி பகுதியில் உள்ள ஹோட்டலில் உள்ளூர் போதைப்பொருள் முகவர்களிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை இன்றையதினம் (27) நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் பார்வையிட சிறந்த சுற்றுலா தளமாக யாழ்ப்பாணம்!

*2026ஆம் ஆண்டிற்கான உலகில் பார்வையிட சிறந்த 25 இடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் பெயரிட்டுள்ளது.*

*உலகளாவிய பயண வெளியீடான லோன்லி பிளானட்* **(Lonely Planet)** *இதனை வெளியிட்டுள்ளது.*

*இலங்கையின் செழுமையான கலாச்சார மற்றும் வரலாற்றுப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.*

*சுற்றுலா மேம்பாட்டு உத்தியின் ஒரு பகுதியாக, பிராந்தியப் பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதற்கான நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகளையும் இது வெளிப்படுத்துகிறது.*

*ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுடன் யாழ்ப்பாணமும் இணைக்கப்பட்டிருப்பது, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை வரவழைக்கும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்துள்ளது.*

*1970-இல் நிறுவப்பட்ட லோன்லி பிளானட், உலகின் மிகவும் நம்பகமான பயண ஊடக வர்த்தக நாமங்களில் ஒன்றாகும். இது உலகளவில் 150 மில்லியனுக்கும் அதிகமான வழிகாட்டிப் புத்தகங்களை விற்றுள்ளதுடன், விரிவான டிஜிட்டல் அணுகலையும் கொண்டுள்ளது.*

## காட்டு யானை சடலமாக மீட்பு



அம்பாறை மாவட்டம் மகாஓயா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமகிபுர பகுதியில் இருந்து யானையொன்றின் சடலம் ஞாயிற்றுக்கிழமை(26) அன்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள சோளம் உற்பத்தி செய்யும் விவசாயக் காணியில் விழுந்து யானை இறந்தமை தொடர்பான விசாரணைகளை வனவிலங்கு கால்நடை பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த காட்டு யானையின் முன் இடது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக மிகவும் சிரமத்துடன் நடந்து வந்ததாகவும் பின்னர் இரண்டு நாட்கள் அம்பாறை வனவிலங்கு கால்நடை பிரிவின் கால்நடை மருத்துவர் நிஹால் புஷ்ப குமார தலைமையிலான குழுவினரால் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மீண்டும் நடக்கத் தொடங்கியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையிலேயே குறித்த யானை கடந்த சனிக்கிழமை(25) மாலை இறந்த நிலையில் காணப்பட்டுள்ளது

## அஸ்வெசும தரவு: உலக வங்கி பிரதிநிதிகள் அதிரடி



"அஸ்வெசும" சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குத் தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது புதுப்பிக்கப்பட்ட மற்றும் துல்லியமான தரவுக் கட்டமைப்பு அவசியம் என உலக வங்கியின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். இதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் சர்வதேச அனுபவத்தை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், உலக வங்கியின் பிரதிநிதிகள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் பாராளுமன்றத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திலேயே 'அஸ்வெசும திட்டம்' குறித்து இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் (கலாநிதி) உபாலி பன்னிலகே, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், உலக வங்கியின் சமூகப் பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட பொருளாதார நிபுணர் பிரான்செஸ்கா லமன்னா (குசயஉெநளஉய டுயஅயயெ) மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு நிபுணர் ஸ்ரீனிவாஸ் வரதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சமூகப் பாதுகாப்புக்கான தரவுத்தளத்தை உருவாக்குவதன் மூலம், உண்மையிலேயே வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள், குடும்பங்களை அடையாளம் காண முடியும் என உலக வங்கியின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். பிரஜைகளின் தகவல்களை சமூகப் பாதுகாப்பு தரவுத்தளத்தில் உள்ளிடுவது அவர்களை அஸ்வெசும அல்லது பிற தொடர்புடைய சலுகைகளுக்கு தகுதியுடையவர்களாக மாற்றாது என்றும், உள்ளிடப்பட்ட தரவைச் சரிபார்க்க முடியும் என்றும், தொடர்புடைய சலுகைகளை துல்லியமாக அடையாளம் காண முடியும் என்றும் இந்தக் குழு வலியுறுத்தியது. இந்தச் சமூகப் பாதுகாப்பு அமைப்பு ஒரு நாட்டிற்கு ஒரு உற்பத்தி முதலீடாகும், எனவே தரவுத்தளத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

"அஸ்வெசும" சலுகைகளை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் குறித்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். அதன்படி, கிராம ரீதியாக அமைக்கப்படும் குழுக்களின் மூலம் அஸ்வெசும பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து, சம்பந்தப்பட்ட கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பெயர்களைக் காண்பிப்பதன் மூலம் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய முடியும் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இங்கு கருத்துத் தெரிவித்த, "அஸ்வெசும" திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கு இந்தத் திட்டம் குறித்து போதுமான தகவல்கள் இல்லாததால் சில தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும், அவர்களின் வகிபாகம் குறித்து முறையான தெளிவுபடுத்தல்களை வழங்குவதன் ஊடாக இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தாம் ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உலக வங்கி ஆலோசகர் ஷாலிகா சுபசிங்க மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2025 வெளியிடப்பெற்றது.